வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசாங்கம் இதைக் கவனித்து அங்கங்கே சிறு துறைகள் ஏற்படவும் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பழவேற்காடு பகுதியில் துறைமுக ஆய்வுக்குழு பரிசீலனை செய்திருக்கிறார்கள். அவர்களது ஆய்வு முடிந்த பிறகு என்ன என்ன வசதிகளைச் செய்துகொடுக்க முடியும் என்பதுபற்றி முடிவு செய்யலாம். சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம் பகுதியில் நிறைய மணல் திட்டுகள் இருக்கின்றன. படகுகள் செல்ல முடியவில்லை, மணல் வாரி இயந்திரம் வைத்து மணல் திட்டை அகற்றுவதை விட மனித உழைப்பால் ஆட்களையே வைத்து மணலை அகற்றலாம், இதற்காகக் கிராம மக்களுக்கு நிதி உதவி அளிக்கலாம் என்ற செயற்குறிப்பு மீனளத் துறையின் பரிசீலனையிலிருக்கிறது.

நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்கள் பொருத்துதல்

*16. வினா—**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய-பெல்ஜிய திட்டத்தின் கீழ், செயல்படுத்தப்பட்டு வரும் நாட்டுப் படகுகளுக்கு இயந்திரத்தைப் பொருத்தும் திட்டத்தை மற்ற மாவட்டங் களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படி எத்தனை போட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அரசு தெரிவிக்குமா? 36 அடி போட்டுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த போட்டுகளில் கட்டிடம் சரியில்லை. கிரேக்ஸ் வந்திருக்கிறது. ஏர் கூலர் என்ற மெஷின்களை வைத்திருக்கிறார்கள். ஏரே போவ தில்லை. ஏர் போனால்தானே. கூல் ஆக்க முடியும்? இதுமாதிரி பல டிபெக்ட்டுகள் இருப்பதால் 36 அடி போட்டுகள் வாங்கியவர்கள் அப்படியே வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது,

1973 ஆகஸ்ட் 4]

கன்ட்ரிபோட்டை மெக்கனேஸ் பண்ணுவது நன்ருக இருக்குமா? மற்ற மாவட்டங்களுக்கு இதை விஸ்தரிக்குமா என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தப் படகுகள், கட்டுமரத்திலே அவுட்போர்டு வைத்து ஏறத்தாழ 100 படகுகள் முட்டத்திலே இருக்கின்றன. அது இந்திய அரசாங்கத்தின் Indian Freedom from Hunger Campaign Society மூலமாக Food and Agriculture Department மூலமாகக் கிடைக்கிறது. வெளிநாடுகளிலிருந்து பல நிறுவனங்கள், இவைகளே யெல்லாம், இதுபோன்ற இன்ஜின்களையெல்லாம் இலவசமாகத் தருகிருர்கள், பரிசாகத் தருகிருர்கள். அதன் விலை ரூ. 4,000 வெளி நாட்டிலிருந்து இந்திய நாட்டிற்கு அதைக் கொண்டு வர ரூ. 2,000 வரி கட்ட வேண்டியிருக்கிறது. மீனவர்கள் ரூ. 2,000 மாத்திரம் கொடுத்துவிட்டு படகுகளே வாங்குவதற்கு முட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதை ஏற்பாடு செய்து, முட்டத்திலே இருக்கிற மீனவர்கள் 100 பேர்களுக்கு இந்த சொஸைட்டியின் மூலமாக, இந்தப் படகுகள் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. அவைகளின் மூலமாக, சாதாரணக்கட்டு மரத்திலே மீன் பிடிப்பதைவிட அதிகமாக, இந்த அவுட்போர்டு வைத்த படகிலே அதிக அளவிலே மீன்பிடிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிற காரணத்தினுல் மற்ற இடங்களுக்கும் இதை விஸ்தரிக்கலாம் என்று இந்தத் துறை மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறது. மத்திய அரசு இந்த Indian Freedom from Hunger Campaign Society யோடு தொடர்பு கொண்டு மேன் மேலும் அவைகளேப் பெற்றுத் தருவார்களானுல், மற்ற இடங்களுக்கும் இந்த அவுட்போர்டு இன்ஜின்களேக் கொடுக்க அரசு முன்வரும்.

உறுப்பினர் அவர்கள் பேசும்போது இடையிலே 36 அடி போட்டுகள் கட்டியது தவறு என்று கூறுகிருர்கள். கேட்ட கேள்வி வேறு, அவர்கள் இடையிலே இணைத்துக் கேட்கின்ற கேள்வி வேறு. உறுப்பினர் அவர்களே குறைபாடுகளேச் சுட்டிக் காட்டலாம். குறைபாடுகள் இருந்தால், சுட்டிக்காட்டப்பட்டால், அவற்றைத் தீர்க்க அரசு என்றைக்குமே முன்வரும்.